SEP 1997

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 22 ஞாயிற்றுக்கிழமை (7-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 270

# மோதல் தவிர்ப்பு மீறப்பட்டது குறித்து இரு தரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டு!

## வெற்றிலைக்கேணி கடற்பரப்பிலும் பொலன்னறுவையிலும் சம்பவங்கள்

கொழும்பு, செப்ரெம்பர் 7

**ஐந்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் ஒரே நாளில் போலியோ தடைச் சொட்டுமருந்து வழங்குவதற்காக படையினராலும் விடுதலைப் புலிகளாலும் கடைப்பிடிக்கப் பட்ட மோதல் தவிர்ப்பு மீறப்பட்டுவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட் டுள்ளது.**

**படையினரே மோதல் தவிர்ப்பை மீறியதாகப் புலிகளும், புலிகளே மீறியதாகப் படையினரும் குற்றஞ்சாட்டி உள்ளனர்.**

போலியோ தடைச் சொட்டு மருந்து வழங்கும் திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நான்கு தினங்கள் மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்க விடுதலைப் புலிகளும் படை தரப்பும் இணங்கி இருந்தது தெரிந்ததே.

போலியோ சொட்டு மருந்து வழங்கும் முதலாவது கட்டப் பணிகள் நடைபெற்ற கடந்த வெள்ளி, சனிக்கிழமை களிலும் —

இரண்டாவது கட்ட பணி கள் நடைபெறும் ஒக்ரோபர் 10 ஆம், 11 ஆம் திகதிகளி லும்— மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் இரவு வெற்றிலைக்கேணிக் கடற் பரப்பிலும் நேற்றுக் காலை பொலன்னறுவை மாவட்ட எல்லைப்பகுதியிலும் இடம் பெற்ற இரு சம்பவங்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் திடீர் தேடுதல்

நேற்று வவுனியா பஸ் நிலையப் பகுதியில் பொலீ ஸாரால் சோதனை நடவ டிக்கை ஒன்று மேற்கொள்ளப் பட்டது.

நகரில் நடமாடிய அனைவ ரும் உடற்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு சோதனை நட வடிக்கை நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பொலீ ஸாருக்குக் கிடைத்த தக வலையடுத்து பஸ் நிலையத் துக்கு சமீபமாக உள்ள மல சல கூடத்தில் இருந்து 2 கைக் குண்டுகளை பொலீஸார் மீட் டனர் என்று தெரிவிக்கப்பட் டது. (இ-164)

## திருமலை கப்பல் சேவை 20 ஆம் திகதிக்கு முன்

### உறுதி கூறுகிறார் ஜனாதிபதி

திருகோணமலை, செப். 7

திருமலை — காங்கேசன் துறை பயணிகள் கப்பல் சேவையை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் மீண்டும் ஆரம்பிப்பதற்கான சகல நட வடிக்கைகளும் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதி யளித்துள்ளார்.

பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பாக ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடந்த வியா ழனன்று ஜனாதிபதியைச் சந் தித்து பேச்சு நடத்தினார். அச்சமயமே ஜனாதிபதி இந்த உறுதிமொழியை அவ ரிடம் வழங்கியதாக ஈ. பி. டி.பி.யின் திருமலை மாவட் டப் பணிமனை வட்டாரங் கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் இந்த உறுதி மொழி திருமலையில் கப்பலை எதிர்பார்த்து நீண்ட நாள்களாகக் காத்து நிற்கும் பயணிகளுக்கு ஈ. பி. டி. பி. உறுப்பினர்களால் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை —

தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள திருமலை பட்ட ணமும் சூழலும் பிரிவு பிர தேச செயலர் வேலும் மயி லும் பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சு நடத்தி வரு வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-150)

## வள்ளங்கள் எரிப்பு சம்பவத்துக்கு தமிழ் ஆயுதக் குழு மீது கண்டனம்!

### காத்தான்குடியில் நேற்று பூரண ஹர்த்தால்

மட்டக்களப்பு, செப். 7

மட்டக்களப்பு காத்தான் குடியில் முஸ் லிம் மீனவர்களின் சுமார் 50 வள்ளங்கள் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட சம்பவத்துக்கு தமிழ் ஆயுதக் குழு ஒன்றின் மீது குற்றஞ் சாட்டி ''தமிழ்—முஸ்லிம் ஐக்கிய அமைப்பு'' என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட் டுள்ளன.

இந்த தீ வைப்புச் சம்பவத்துக்கு ஆட் சேபனை தெரிவித்து நேற்று மட்டக்களப்பு, காத்தான் குடியில் பூரண ஹர்த்தால் அனுஷ் டிக்கப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது.

மீன்பிடி வள்ளங்கள் எரிக்கப்பட்ட சம்ப வத்துக்கு பாதுகாப்புப் படைகளுடன் இணைந்து செயற்படும் தமிழ் ஆயுதக்குழு ஒன்றே பொறுப்பு என்று சுவரொட்டிகளில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்றும் சுவ ரொட்டியில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மன்னார் - யாழ். சேவையில் அடுத்த வாரம் முதல் புதிய கப்பல்

வவுனியா, செப். 7

காங்கேசன்துறைக்கும், மன் னாருக்கும் இடையில் ''நமோனா'' என்ற மற் றொரு கப்பல் அடுத்த வாரம் முதல் சேவையில் ஈடுபட விருப்பதாக மன்னார் செய லக அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

300 பயணிகள் செல்லக் கூடிய இக்கப்பல் சேவையை தனியார் நிறுவனம் ஒன்று கடற்படையினரின் பாதுகாப் புடன் நடத்தவிருக்கிறது.

இக்கப்பலின் சேவை ஆரம் பித்ததும், ''தராகி'' கப்ப லும், இக்கப்பலும் ஒன்று விட்ட ஒருநாள் சேவையை மேற்கொள்ளும் எனத் தெரி விக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருவதற் காக மன்னாரில் தங்கியுள்ள ஆயிரத்து 700 பேரையும் இதன் மூலம் ஒருவாரகாலத் தில் யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப முடியும் என்றும்-

அதன் பின்னர் வவுனியா திருமலை பகுதிகளில் தங்கி யுள்ள அகதிகளை பஸ்கள் மூலம் மன்னாருக்கு அழைத்து வந்து அங்கிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும்- அந்த அதிகாரி தெரிவித்தார்.

திருமலை, வவுனியாவில் இருந்து அகதிகளை மன்னார் அழைத்து வர வசதியாக 10 பஸ்கள் விரைவில் மன் னாருக்கு வந்துசேரவுள்ளதா கவும் அவர் தெரிவித்தார். (ஐ-3-164)

## முழு விசாரணை நடத்த ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 7

''மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடி பாலமுனைப் பகுதிகளில் முஸ்லிம் மீனவர்களின் வள்ளங்கள் எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சுதந்திர விசாரணை நடத்தப்பட வேண்டும்.''

தபால், தொலைத்தொடர்புகள் வெகுஜனத்தொடர்பு பிரதி அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா மேற் கண்டவாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மட்டக் களப்பு மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கு உதவும் தமிழ் ஆயுதக் குழுவைச் சேர்ந்த சில அங்கத்தவர்கள் 4 ஆம் திகதி மேற்படி இரு கிராமங்களுக்கும் சென்று மீனவர்களி

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸாருக்கு இருவாரகால தீவிர பயிற்சி

திருகோணமலை, செப். 7

தெரிவு செய்யப்பட்ட 50 பொலீஸாருக்கு இரு வார கால தீவிர பயிற்சி வழங்கப் படவுள்ளதாக பொலீஸ் வட் டாரங்கள் தெரிவித்தன.

தீவிரவாத எதிர்ப்பு நடவ டிக்கை, மிக நெருக்கமாக சண்டையிடல், குண்டுகளைச் செயலிழக்கச் செய்தல், எதிரி களிடமிருந்து ஆயுதங்களை அதிரடியாகக் களைதல்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உவர்மலையில் சுற்றிவளைப்பு

திருகோணமலை, செப். 7

திருகோணமலையில் உவர் மலைப் பகுதியில் பொலீஸார் சுற்றிவளைப்பைமேற்கொண் டதால் சிறுவர்களுக்கு போலியோ தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் பாதிக்கப் பட்டன என ''புலிகளின் குரல்'' நேற்று இரவு தெரி வித்தது.

## டயானாவின் இறுதி யாத்திரையில் திரண்ட லட்சக்கணக்கான மக்கள்!

பாரிஸ், செப். 7

இளவரசி டயானாவின் பூதவுடல் நேற்று நல்லடக் கம் செய்யப்பட்டது.

இலங்கை நேரம் [illegible] மணிக்கு பூதவுடல் அரச மரி யாதைகளுடன் 4ராஜகுதிரை கள் இழுக்க வண்டியில் கென் சிங்ரன் அரண்மனையிலிருந்து புறப்பட்டது.

[illegible] அரண்மனையைக் கடந்த போது எலிஸபெத் மகா ராணியாரும் அரச குடும்பத் தினரும் அரண்மனையை விட்டு வெளியேவந்து பூதவு டல் வைக்கப்பட்டிருந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை தெரெஸா இறுதி வார்த்தை

உயிர் பிரிவதற்கு முன்னர் அன்னை தெரெஸா தமது நெஞ்சைப் பிடித்துக்கொண்டு இனி தம்மால் சுவாசிக்க முடி யாது என கூறினார் என் றும் —

இதுவே அவர் உதிர்த்த கடைசி வார்த்தை என்றும் — ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைக்கிறோ கொங்கிறீற் கூரைத் தகடுகள்

**MCR Roofing Sheets**

மேற்படி கூரைத் தகடுகள்
**விற்பனைக்கு வந்து விட்டன!**

இக் கூரைத்தகடு ஒன்று நான்கு சாதாரண ஓடுகளின் அளவுடையது.

**விலை ரூபா 75/- மட்டுமே!**

ஓடர் கொடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

கிடைக்கும் இடம்:

**மனித முன்னேற்ற நடுநிலையம்**

**HUDEC**

மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (49507)


## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து), சுன்னாகம்.

## அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு சங்கத் தொழிற் பரப்பில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | கிளை முகாமையாளர் | குறி இல. | 208 : 14 |
| 2. | ,, | ,, ,, | 208 : 15 |
| 3. | ,, | ,, ,, | 208 : 16 |
| 4. | விற்பனையாளர் | ,, ,, | 308 : 15 |
| 5. | ,, | ,, ,, | 308 : 17 |

விண்ணப்பப் படிவத்தையும், விவரங்களையும் வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 15/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி:- **23 — 09 — 1997**

**- பொதுமுகாமையாளர்.**

பல நோ. கூ, சங்கம்,
சுன்னாகம். 05-09-97. (சி-1506)

## அவசர வைத்திய உதவி

போதனைகளும், பயிற்சியும் **15-09-97** ஆரம்பமாகி, முடிவில் தகுதி காண்பவருக்குத் தராதரப் பத்திரமும் (ஸ்கொட்லண்ட்) அங்கத்துவ அட்டையும் வழங்கப்படும்: மேலதிக விவரங்களுக்கு நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கவும்.

**V. SRIKUHASIVALOGANATHAN**
கௌரவ காரியதரிசி
**St. A. AMBULANCE ASSOCIATION,**
**POTPATHY ROAD, KOKUVIL.**

(49497)

## நூல்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப்.7

சர்வதேச எழுத்தறிவு தினத்தை ஒட்டி மானிப்பாய் கோயில் பற்று லயன்ஸ் கழக உறுப்பினர்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி, நவாலி அட்டகிரி வித்தியாலயம், சுதுமலை வடக்கு த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ)


**D. M. I.**
233, Stanley Road.

**கிரயக் கணக்கீடு**
**(Cost Acc...)**
ஆரம்பமாகின்றது.

**A/L 98, 99**
நடைபெறுகின்றது.

**DAY CLASS**
(பகல் நேர வகுப்பு)

**ஆசிரியர்:**
**D. Sam**
(49505)

**3, 4, 5 ஆம் ஆண்டு**
(புதிய பிரிவு)
**வகுப்புகள்**

ஆரம்பம்:
**09 — 09 — 1997**
**BOND INSTITUTES**
58A, STANLEY ROAD,
JAFFNA.
(49592)

**தேவை**

**ஐஸ்கிறீம் மேக்கர் தேவை**
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**அருண் கிறீம் கவுஸ்**
34, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[49476]


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் **22** ஆம் நாள் (**07-09-97**) ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1. 16 மணி முதல் பி. ப. 2. 28 மணி வரையுள்ள வளர்பிறையும், சுவாதி நட்சத்திரமும், தனு லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்

**திரு. திருமதி**
**கதிரேசம்பிள்ளை**
தம்பதிகளின் புதல்வன்
திருநிறை செல்வன்
**மோகனதாஸ்**
(கப்பல் பொறியியலாளர்)



**திரு. திருமதி**
**கனகரட்ணம்**
தம்பதிகளின் புதல்வி
திருநிறை செல்வி
**வசந்தி**
(ஆசிரியை,
யா/ வீமன்காமம்
மகாவித்தியாலயம்)

இவர்களின் திருமண வைபவம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, கொழும்பு-13 கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் கோயில் **ஐங்கரன் கல்யாண மண்டபத்தில்** நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் இல்லத்தாருடன் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அங்கு நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்களின் நல்வரவை இனிதே விரும்பும்:

**திரு. திருமதி**
**கதிரேசம்பிள்ளை தம்பதிகள்**
64/4, போனா விஸ்டா பிளேஸ்,
மோதற வீதி, கொழும்பு-15

**திரு. திருமதி**
**கனகரட்ணம் தம்பதிகள்**
109/15, மனிங் பிளேஸ்,
கொழும்பு-6
[பெரிய மதவடி, சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்]

(சி/1504)

★ இருவீட்டார் அழைப்பு ★

# மரண அறிவித்தல்கள்

## வைரவநாதர் தெய்வானைப்பிள்ளை

ஆவரங்காலைச் சேர்ந்த திருமதி வைரவநாதர் தெய்வானைப்பிள்ளை 4-9-97 இல் தனது இல்லத்தில் சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற ஆறுமுகம் வைரவநாதரின் அன்பு மனைவியும் வேலுப்பிள்ளை (இளைப்பாறிய உதவி காணிப்பதிவுகாரரும் மேலதிக பெரும்பகுதி பதிவுகாரரும்), கனகம்மா, ஈஸ்வரி, சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற தையல்நாயகி, ஆறுமுகம் (அதிபர், ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், றோயல் கல்லூரி, கொழும்பு), சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தாயாரும், நவமணி (இளைப்பாறிய ஆசிரியர்), தம்பித்துரை (இளைப்பாறிய ஆசிரியர்), கந்தசாமி (Pure Beverages Co. Ltd.), தங்கமுத்து (ராசு), ருக்மணிதேவி, நிர்மலாதேவி, கந்தசாமி (வர்த்தகர்) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 5-9-97 இல் அவரது இல்லத்தில் நடைபெற்றன.

தகவல்:
மக்கள், மருமக்கள்.

[சி/1508]

## திருமதி துரைரத்தினம் சரஸ்வதி

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் தெற்கு பழம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட துரைரத்தினம் சரஸ்வதி 5 - 9 - 97 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வயிரவி — வள்ளிப்பிள்ளையின் மகளும், காலஞ்சென்ற துரைரத்தினத்தின் அன்பு மனைவியும், தெ. சரஸ்வதி, தி. வள்ளிநாயகி, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சிவபாக்கியம் (மலேசியா) ஆகியோரின் சகோதரியும், இரத்தினகுமார் (டென்மார்க்), இராசகுமார் (ஜேர்மனி), சிவகுமார் (தெ. ப. நோ. கூ. ச), பராசக்தி, பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6 - 9 - 97 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. சிவகுமார்
(மகன்)

(49510)

## திருமதி தேவநாயகி மகிழ்ராஜா

(ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

இராஜவீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி தேவநாயகி மகிழ்ராஜா 4- 9- 97 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் றோய் மகிழ்ராஜா (மகாவலி அபிவிருத்திச்சபை, கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், பீற்றர் நரேஷின் அன்புத் தாயாரும், திரு. சின்னத்துரை (இளைப்பாறிய சுகாதார பரிசோதகர், சோதிடர்), திருமதி பெல்லா சின்னத்துரை (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகளும், திரு. திருமதி செல்லத்தம்பி தம்பதிகளின் மருமகளும், தேவசக்தி ஏபிரகாம் (லண்டன்), தேவஜோதி குலநாயகம் (புனர்வாழ்வுக் கிளை, யாழ். செயலகம்), தேவராஜன் (லண்டன்), தேவராணி தேவதாசன் (கொழும்பு), டனோ தேவகுரு (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 11 - 09 - 97 வியாழக்கிழமை மாலை கொழும்பில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே, சின்னத்துரை (தந்தை)
49, இராச வீதி,
நல்லூர்.

101, Hunupitiya Lake Road,
Colombo - 02. (49500)

## திருமதி இராஜேஸ்வரி செல்வராசா

அளவெட்டி வடக்கு மணல் வளவை நிரந்தர வசிப்பிடமாகவும், தாவடி வடக்கை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி செல்வராசா 5-09-97 வெள்ளிக்கிழமை அன்று இரவு இறைபதமெய்தினார்.

அன்னார் கந்தையா செல்வராசாவின் அன்புத் துணைவியாரும், குமணன் (பிரான்ஸ்), அனுஷா, கிருபா ஆகியோரின் அன்புத் தாயாரும், அளவெட்டி வடக்கு, பெத்தாவளையைச் சேர்ந்த சுப்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கணேசமூர்த்தி (யாழ். கூட்டுறவுத் திணைக்களத் தலைமை அலுவலக பரிசோதகர்), பொன்னுத்துரை (பொன்மலர் ஸ்ரோர்ஸ், அளவெட்டி), திருமதி சரஸ்வதி சின்னத்துரை, திருமதி சத்தியவதி ஆனந்தஜோதி, பாலச்சந்திரன், திருமதி யோகவதி சத்தியானந்தன் (கனடா), தர்மசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அளவெட்டி வடக்கு, மாவத்தையைச் சேர்ந்த கந்தையா பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகராசா, திருமதி புவனேஸ்வரி, கந்தையா (இந்தியா), திருமதி பரமேஸ்வரி இராசையா, தருமராசா, தங்கராசா, திருமதி லலிதாதேவி மயில்வாகனம், பத்மநாதன் (டென்மார்க்), பானுமதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6-09-97 (சனிக்கிழமை) தாவடி வடக்கில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா செல்வராசா
(கணவர்)

தாவடி வடக்கு,
கொக்குவில். (49509)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தெரேசாவின் இறுதிச் சடங்கு புதனன்று

## உலகத் தலைவர்கள் அஞ்சலி

கல்கத்தா, செப். 7

கல்கத்தாவில் நேற்று முன்தினம் இரவு மாரடைப்பினால் காலமான அன்னை தெரேஸாவின் மறைவு குறித்து இந்திய தலைவர்களும், உலகத் தலைவர்கள் பலரும் தங்கள் இரங்கல் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியா உட்பட உலக நாடுகளில் லட்சக்கணக்கான மக்களின் இதயங்களைக் கவர்ந்த பாத்திரமாக அன்னை விளங்கினார்.

அன்னை தெரேஸாவின் உயிர் பிரிந்த செய்தி பரவியதும் நேற்று அதிகாலை முதல் கல்கத்தாவில் உள்ள அவரது இல்லத்திற்கு வெளியே பெரும் எண்ணிக்கையான மக்கள் திரண்டனர்.

அன்னையின் உடல் அவரது இல்லத்தில் உள்ள பிரதான பிரார்த்தனை மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பல்லாயிரக்கணக்கானோர் அங்கு சென்றவண்ணம் உள்ளனர்.

அன்னையின் இறுதிச் சடங்குகள் அவருக்கு மிகவும் பிடித்த நாளான எதிர்வரும் புதன்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அன்னை தெரேஸாவின் மரணம் இந்திய மக்களைப் பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு சரியாக 9.30மணிக்கு அன்னையை மரணம் ஆட்கொண்டது. இருதய வலி காரணமாக கல்கத்தாவிலுள்ள இருதயநோய்ச் சத்திரசிகிச்சை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவரை காப்பாற்ற டாக்டர்களால் முடியாமற் போனது.

திருத்தந்தை இரண்டாம் அருளப்பர்சின்னப்பர் அன்னையின் மரணச் செய்தி கேட்டு மிகவும் வருத்தமடைந்ததாகவும் தனது வழிபாட்டுக் கோயிலுக்குத் தனியாகச் சென்று அவர் ஜெபத்தில் ஈடுபட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்திய ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் அன்னை அவர்களை 'இரக்கத்தின் தூதுவர்' எனப் புகழ்ந்தார். இவரைப் போன்ற ஒருவரை இம்மண்ணில் மீண்டும் காண்பது மிக அரிது என்றார் அவர்.

பிரதமர் குஜ்ரால், தனது கவலையை வர்ணிக்க நாள் போதாது என்றார். மேற்கு வங்க முதல்வர் ஜோதிபாசு உலகம் ஓர் உத்தமியை இழந்து விட்டது என்றார்.

அன்னை அவர்களின் இறப்புக்குப் பிறகு உலகத்தில் நிலவும் இரக்கத்தின் அளவு குறைந்து விட்டது என்று தனது இரங்கற் செய்தியில் கூறினார் பிரான்ஸ் அதிபர் ஜெக் ஷிராக்.

தற்கால வரலாற்றின் நாயகி அன்னை தெரேஸா என அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தெரிவித்தார். அமெரிக்கர்கள் அனைவரும் துயரத்தில் ஆழ்ந்துள்ளனர். முன்னாள் அமெரிக்க அதிபர்கள்ஜோர்ஜ்புஷ், றொனால்ட் றேகன் ஆகியோரும் இரங்கற் செய்தி அனுப்பியுள்ளனர்.

இந்திய ஆயர் பேரவையின் தலைவர் மேதகு அன்ரனிப் பிள்ளை, இந்த நூற்றாண்டு கண்ட அருமையான ஒருவர் அன்னை தெரேஸா என்றார்.

இளவரசி டயானாவின் மரணச் சுழலில் இருந்து

**உலக அரங்கில்**

கொண்டிருக்கும் இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிஸபெத்தும், பிரதமர் ரொனி பிளயரும் அன்னை அவர்களின் மரணத்துக்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

(ஐ-5)

சிடோன் துறைமுகப் பகுதியில்

## இஸ்ரேலியபடைக்கு பலத்த அடி! 11 கொமாண்டோக்கள் பலி!!

பெய்ரூட், செப். 7

தெற்கு லெபனானின் சிடோன் துறைமுகத்துக்கு அருகே அதிரடித் தாக்குதல் நடத்த முயன்ற இஸ்ரேலியக் கொமாண்டோக்கள் மீது ஹிஸ்புல்லா கெரில்லாக்கள் நடத்திய பதில் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர்.

இரவோடு இரவாகத் தரையிறங்கிய இஸ்ரேலியப் படைப் பிரிவு கெரில்லாக்களின் கடும் தாக்குதலை எதிர்கொள்ள நேர்ந்தது.

தாக்குதலில் சிக்கிய கொமாண்டோக்களை மீட்பதற்காக இஸ்ரேலிய ஹெலிகளும், விமானங்களும் அப்பகுதிக்கு அவசரமாக அனுப்பப்பட்டன. அதனையடுத்து அப் பகுதியில் சண்டை மூண்டது. கெரில்லாக்களுடன் லெபனான் இராணுவத்தினரும் சண்டையில் பங்குபற்றினர்.

1985 இல் தெற்கு லெபனானில் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஆக்கிரமித்த பின்னர் இஸ்ரேலியப் படையினர் சந்தித்த மிக மோசமான உயிர்ச் சேதம் இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலினால் ஆத்திர முற்றுள்ள இஸ்ரேல் பிரதமர் நத்தன்யாகு லெபனான் தீவிரவாதிகளுக்கு எதிரான போர் தொடர்ந்து நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

(ஐ)

## 2 ஆயிரத்து 4 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி எதென்ஸில்!

லூஸன் செப். 7

2 ஆயிரத்து 4 ஆம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளை நடத்த கிரேக்கத் தலைநகர் எதென்ஸ் நகரம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது.

சுவிற்சர்லாந்தின் லூஸன் நகரில் கூடிய சர்வதேச ஒலிம்பிக்குழுவின் கூட்டத்தில் இறுதிவாக்கெடுப்பில் எதென்ஸ் நகரம் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இத் தெரிவில் எதென்ஸ் நகருடன் கேப்ரவுண் புவனர்ஸ் அயர்ஸ், ஸ்ரோக்ஹோம், ரோம் ஆகிய நகரங்களும் போட்டியிட்டன.

(ஐ)

## அன்ஜோன் தீவில் சண்டை நீடிப்பு! 30 கொமோரோ படையினர் பலி!!

மொரோனி, செப். 7

தீவிரவாதக் கிளர்ச்சியை அடக்குவதற்காக அன்ஜோன் தீவில் தரையிறங்கிய கொமோரோ அரச படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே தொடர்ந்து சண்டை இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரையிறங்கிய அரச படையினரில் 30 பேரும், எண்ணிக்கை விவரம் தெரியாத சில பொது மக்களும் இதுவரை கொல்லப்பட்டிருப்பதாகவும்—

தீவிரவாதிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதில் கொமோரோ படையினர் தோல்வி கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுயாட்சி கோரும் அன்ஜோன் தீவில் அமைதி நிலை நாட்டப்பட்டிருப்பதாக முதலில் தெரிவித்த கூற்றை அரச அதிகாரி ஒருவர் பின்னர் வாபஸ் பெற்றுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் பிரெஞ்சு காலனி நாடான கொமோரோ நாட்டின் உபதீவுகளில் ஒன்றே அன்ஜோன் ஆகும்.

இந்து மா சமுத்திரத்தில் ஆபிரிக்காக் கண்டத்துக்கு அருகாக இத் தீவு அமைந்துள்ளது.

(ஐ)

## ஜெருஸலத்தில் மீண்டும் குண்டுத் தாக்குதல்

ஜெருஸலம், செப். 7

ஜெருஸலத்தின் மத்திய பகுதியில் கடந்த வியாழனன்று மூன்று குண்டுகள் வெடித்தன.

இதனால் 8 பேர் பலியானார்கள்.

இவர்களில் மூவர் தற்கொலைப் படை உறுப்பினர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல்களின் போது 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களை இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நத்தன்யாகு மருத்துவமனைக்குச் சென்று பார்வையிட்டார்.

பலஸ்தீனர்கள் தொடர்ந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தன்னால் முன்னெடுத்துச் செல்ல முடியாது என நத்தன்யாகு அங்கு தெரிவித்தார்.

(இ-10)


# நியூ விமாகி

## அன்பளிப்புப் பொருள்கள்

★ கிளாஸ் வகைகள்
★ ரீமக் செருமிக் ரீமக்
★ செருமிக் பிளேற்ஸ்
★ கிளாஸ் பிளேற்ஸ்
★ கறி டிஸ்
★ கப் & சோசர் செற்
★ ரீ செற்
★ டினசெற்

என்பன விசேட கழிவுடன் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள ஒரே இடம்:

**நாடுங்கள்:**

## நியூ விமாகி

★ இனாமல் பெயின்ற் வகைகள்
★ எமல்சன் பெயின்ற் வகைகள்
★ வுளோ பெயின்ற்
★ வாணீஸ்
★ காட்போட் சீற் (8 × 4)
★ S. பைப் 4'
★ G. I. சீற் (கல்வனேஸ் தகரம் 18 G)
★ குசினித் தொட்டிகள் மாபிள் (S Steell' Sing)
★ கொமேட் சிஸ்ரன் ராங் (Diplomat , Lustra)
★ வெள்ளை கலர் 4 × 4 மாபிள்
★ வெள்ளை கலர் 6 × 6 மாபிள்
★ ஸ்கொட்டிங் பான், மாபிள் கால்மிதி
★ ½ நூல் கண்ணாடி

இவை யாவற்றையும் விசேட கழிவுடன் பெற்றுக் கொள்ள வேண்டிய ஒரே இடம்:

## நியூ விமாகி

**27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

(49492)



தெல்லிப்பழை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மஹா கும்பாபிஷேகம்

**காலம்:- 07 - 09 - 97 ஞாயிற்றுக்கிழமை**

அதிகாலை 6–05 முதல்
மஹாபூரணாகுதி, யாக தீபாராதனை கும்ப வீதி, பிரதட்சணம்
6–41 மணி
தூபிகள் கும்பாபிஷேகம், பிரதான கும்ப வீதி, பிரதட்சணம்
7–41 மணி
இராஜகோபுர கும்பாபிஷேகம்,
8–30 மணி
மஹா கும்பாபிஷேகம், தசதர்சனம்
12–00மணி
மஹா அபிஷேகம், திருவீதி உலா.



நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(சி-1472)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தம்

06. 09. 97 அன்று சஞ்சீவியில் பிரசுரிக்கப்பட்ட **திருச்சிற்றம்பலப்பிள்ளையார்** தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனத்தில் 07 - 09 - 97 இன்று காலை 10 மணிக்கு துவஜ ஆரோகணம் என்றும், துவஜாரோகண பிரதமகுரு சிவஸ்ரீ து. விவேகானந்தக் குருக்கள் என்றும் திருத்தி வாசிக்கவும்.

(49491)

## சுவரொட்டிப் போட்டி

திருநெல்வேலி, செப். 7

யாழ். லயன்ஸ் கழக யாழ். நகரிலுள்ள பாடசாலைகளுக்கு இடையில் இவ் வருடமும் சமாதானத்திற்கான சுவரொட்டிப் போட்டியை நடத்தவுள்ளது என கழகத் தலைவர் லயன். எஸ் என். கதிரவேலு தெரிவித்தார்.

(ஐ-135)

## ஏல விற்பனை

'கெயர்' நிறுவனத்தால் பின்வரும் பொருள்கள் **15. 09. 97** ஆம் திகதி காலை 10 மணிக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட இருக்கின்றன.

| | | |
|---|---|---|
| (1) | மரப்பெட்டிகள் | — 150 |
| (2) | வெற்றுக் கான்கள் (பிளாஸ்டிக்) | — 15 |
| (3) | சைக்கிள் (ஆண்) | — 01 |
| (4) | கார் சைலென்சர் (VW) | — 01 |
| (5) | கார் டயர் (VW) | — 02 |

ஆகக் கூடிய விலை கோருபவர் உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

திட்டப்பணிப்பாளர்,
கெயர் சர்வதேசம்,
யாழ்ப்பாணம்.

(49459)

## புதிய வகுப்புகள் ஆரம்பம்

**தட்டச்சு தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து.**
**ஆங்கில வகுப்பு, தையல் பயிற்சி, இசைப் பயிற்சி**
(கிற்றார், ஓர்கன், மெலோடிக்கா)

ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுப்ப வேண்டிய முகவரி:-

**திட்டப்பணிப்பாளர்,**
41, 4 ஆம் குறுக்குத் தெரு,
சிற்றி மிசன்,
யாழ்ப்பாணம்.

திட்டப்பணிப்பாளர்,
**தொழில் பயிற்சி நிலையம்,**
**தென்னிந்திய திருச்சபை,**
**யாழ்ப்பாணம்.**

(49461)

## அதிர்ஷ்டம் பார்க்கப்படும்

தென்புலோலியூர் ஆரோக்கிய அன்னை சனசமூக நிலையத்தினரால் 27. 07. 97 அதிர்ஷ்டம் பார்க்க இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று பார்க்கப்படவில்லை. அந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு **15. 09. 97** அன்று மாலை சன சமூக முன்றலில் அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத் தருகிறேன்.

—நிர்வாகி

(49472)

## கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பு மாணவன்
செல்வன் இ. பகீரதனின் தந்தையார்

**கந்தையா இராசலிங்கம்**

அவர்கள் 04 - 09 - 1997 அன்று காலமானார். அன்னாருக்கு எமது அஞ்சலியையும், துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆண்டு 11 B - 11 E மாணவர்கள்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

(49480)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## சுண்டுக்குளி கிளை நூலகம்
## விசேட அறிவித்தல்

1995ஆம்ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் சுண்டுக்குளி கிளை நூலகஇடாப்புக்கள் யாவும் தொலைந்தமையால் இக்கிளை நூலகத்தில் பதிவு செய்த அங்கத்தவர்கள் தமது பதிவு இலக்கங்களை 30 - 09 - 97ஆம் திகதிக்கு முன்னர் பிரதம நூலகருக்கு தெரியப்படுத்தி தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்துமாறு கோருகின்றோம். 30 - 09 - 97 இற்கு பின்னர் பழைய அங்கத்துவம் யாவும் இரத்துச் செய்யப்பட்டு புதிய அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

பழைய அங்கத்துவ இலக்கத்தைத் தெரியப்படுத்துவோர் தற்போது நடைமுறையில் இருக்கும் புதிய விதிகளுக்கு அமைவாக தங்கள் அங்கத்துவங்களைப் புதுப்பித்தல் வேண்டும் என்பதையும் தயவுடன் தெரியப்படுத்துகின்றோம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்.
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 1997 - 09 - 04

(சி-1483)

## ஓவியம் படைத்திடுவீர்!

## உலக உளநல நாள் - ஒக்ரோபர் - 10

★ மேற்படி உலக உளநல நாளையொட்டி ''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவில் ஓவியப் படைப்புகளுக்கான ''சாந்திகம்'' களம் அமைகிறது.

★ இந்த ஆண்டு ஓவியப் படைப்பாக்கக் களம் நான்கு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

★ ஒவ்வொரு பிரிவினரும் அப்பிரிவுக்குரிய வாசகங்களைத் தூண்டுதலுக்கான தொனிப்பொருளாகக் கொண்டு தங்களது துலங்கல்களை ஓவியமாகப் படைக்க வேண்டும்.

★ ஓவியப் படைப்புக்கள் தற்புதுமையானவையாகவும், கலைத்துவம் நிறைந்த படைப்பாக்கங்களாகவும் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

★ ஓவிய வகைகளையும், ஓவிய சாதனங்களையும் விரும்பியபடி தெரிவு செய்யலாம்.

★ படைப்புகள் ஆகக் குறைந்தது 35 x 25 சென்ரிமீற்றர் அளவு கொண்டதாக அமையவேண்டும்.

★ அப்படைப்பு தடித்த அட்டையில் ஆகக் குறைந்தது 4 செ.மீற்றர் கரை நாற்புறமும் வருமாறு அழகாக ஒட்டப்படவேண்டும்.

★ சமர்ப்பிக்கப்படும் ஓவியங்கள் அனைத்தையும் கொண்டதோர் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்படும்.

★ இந்த ஓவியப் படைப்பாக்கக் களத்தில் அதனை நடத்துகின்ற நிறுவனங்களின் பணியாளர்கள் தவிர்ந்த ஆர்வமுள்ள எல்லோரும் பங்குகொள்ள முடியும்.

★ ஒருவர் எத்தனை படைப்புகளையும் அனுப்பலாம்.

★ படைப்புகளில் எந்த இடத்திலும் உங்களது பெயர், விலாசம் என்பவற்றை குறிக்கவேண்டாம்.

★ ஓவியப் படைப்புகளை 1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் 10ஆம் திகதிக்கு முன்பதாக பின்வரும் இடங்களில் ஒப்படைக்கவும்.
1. சாந்திகம், இல. 15, கச்சேரி, நல்லூர் வீதி, சுண்டுக்குளி
2. உதயன் பணிமனை, இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3. உளநோய் சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.

★ படைப்புகளைச் சமர்ப்பிக்கும்போது தவறாமல் அதற்குரிய படிவத்தைப் பெற்றுப் பூரணப்படுத்திக் கொடுத்து உங்களுக்குரிய பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

★ தெரிவுக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

★ தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களைப் படைத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

● பிரிவு ஒன்று — ஆண்டு ஐந்து வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **அம்மாவும் அப்பாவும் நானும்.**
முதலாவது தெரிவு ரூபா **500**
இரண்டாவது தெரிவு ரூபா **300**
மூன்றாவது தெரிவு ரூபா **200**

● பிரிவு இரண்டு — ஆண்டு 6 - ஆண்டு 9 வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **தந்தையின் கிராமம்**
முதலாவது தெரிவு ரூபா **1, 000**
இரண்டாவது தெரிவு ரூபா **750**
மூன்றாவது தெரிவு ரூபா **500**

● பிரிவு மூன்று — ஆண்டு 10 - ஆண்டு 13 வரையிலான மாணவர்கள்.
வாசகம்: **பாழடைந்த கோயிலின் பரம்பொருள்**
முதலாவது தெரிவு ரூபா **2, 000**
இரண்டாவது தெரிவு ரூபா **1, 500**
மூன்றாவது தெரிவு ரூபா **1, 000**

● பிரிவு நான்கு — பயில் முறை, தொழில் முறைக் கலைஞர்கள்
வாசகம்: **சித்தம் அழகியார்**
முதலாவது தெரிவு ரூபா **5, 000**
இரண்டாவது தெரிவு ரூபா **3, 000**
மூன்றாவது தெரிவு ரூபா **2, 000**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர்
**திரு. வ. ஆறுமுகம்**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வயிரவநாதர் சோதிப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**யா/ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி**
உபஅதிபர்,
ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள்.
புத்தூர்.

(49468)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். கடற்றொழில் திணைக்களத்தில் கடமையாற்றும் கடலக பொறியியல் உதவியாளர்

**திரு. மு. மகாதேவா**
அவர்களின் தாயார்

**திருமதி நாகரத்தினம் முத்துக்குமாரசாமி**

03.09.97 அன்று மட்டக்களப்பில் காலமானார். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாவட்டக் கடற்றொழில் விரிவாக்க அலுவலக உத்தியோகத்தர்கள்.**

(49465)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதிப்போர்க்கு துன்பம் போக்கும் துர்க்காதேவி

அருட்சிறப்பாலும் அற்புதங்களாலும் அகில உலகெல்லாம் வாழும் லட்சக் கணக்கான அடியவரின் அகம் நிறைந்த தெய்வமாக விளங்கும் எங்கள் தெல்லியூர் துர்க்கை அம்பாளின் மகா கும்பாபிஷேக பெரும் சாந்தி வைபம் இன்று நடைபெறவுள்ளது.

பதினாறு வருடங்களின் பின் நடைபெறும், புனித விழா அம்பாளின் புண்ணிய விழா. கேட்ட வரம் அருளும் நாயகியாக விளங்கி சிறப்புற்று இருக்கும் பெருமாட்டியின் பெரும் தலம் மிகப் பழைமை வாய்ந்த தலமாகும் மாங்கல்ய வாழ்வு, மழலைச் செல்வப் பேறு, வாணிப விருத்தி, நோயற்ற வாழ்வு எனப் பலவும் கேட்கும் பக்தர்களுக்கு இறைஞ்சுகின்ற இனிய அம்பாளை தரிசிக்க வரும் அடியவர்கள் எல்லாம் நற்பேறு பெற்று எங்கும் துர்க்கை அம்பாளின் பேரருட் சிறப்பு வியாபித்துள்ளது.

தேசம் காக்கும் தாயாக தெல்லிமாநகரில் அமைந்த எம் அன்னையின் நாமத்தால் அடியவர்கள் அள்ளித்தரும் காணிக்கையில் ஆலயப்பணியோடு பல்வேறு அறப்பணிகளையும் ஆற்றும் வாய்ப்பு ஆலய அடியவர்களாகிய எமக்கு கிடைத்தது. நாட்டின் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட திருப்பணி வேலைகள் மீண்டும், புத்துயிர் பெற்று புனர், நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்பட்டு குடமுழுக்கு வைபவம் இன்று நடைபெறுகிறது. அம்பாளின் சன்னிதானத்துக்கு ஒரு குறையும் இல்லாது அடியவர்கள் காலத்துக்குக் காலம் திருப்பணிகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

எங்கள் ஆலய அருட் பொலிவை பிரதம சிவாச்சாரியார் சுந்தரேஸ்வரக் குருக்களும், அகிலேஸ்வரக் குருக்களும் அனுதினமும் காத்து ஆகம முறைப்படி பேணி வருகிறார்கள். இவ்வாண்டு ஈழநாட்டுச் சிற்ப, ஓவிய, கட்டடக் கலைஞர்களின் கைவண்ணத்தில் பல திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. எமது ஆலயத்தின் அரவணைப்பில் இயங்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், தொண்டர்களின் அயராப் பணியும் புதுப் பொலிவுபெறும் எமது ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் துணையாக உள்ளன.

கண்ணியது உன்புகழ் கற்பது
உன் நாமம் — கசிந்து பக்தி
பண்ணியது உன் இரு பாதாம்
புயத்தில் — பகல் இரவா
நண்ணியது உன்னை
நயந்தோர் அவையத்து
நான் முன் செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே
புவி ஏழையும் பூத்தவளே!

என்ற அபிராமிப் பட்டரின் திருப்பாடலின் அடிகளை மீண்டும் மீண்டும் உச்சரித்து எமது தாயை வேண்டுவோம்.

சைவ அன்பர்களே, அருட் தாயின் ஆனந்தப் பொலிவு காண ஆசார சீலர்களாக கும்பாபிஷேக வைபவத்தில் கலந்து இன்புறுமாறு வேண்டுகிறோம். துதிப்போர்க்கு வல்வினை போக்குகின்ற துர்க்கை அம்பாளே! தாயே! எம் திருநாட்டில் தீது அகன்று தெய்வத் திருநாடாக விளங்க இப்புண்ணிய பெரு நாளில் மன்றாடுகின்றோம்.

செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.


துர்க்கை அம்மன் தெல்லிப்பழை

### தெல்லிப்பழை துர்க்கைக்கு இன்று மகாகும்பாபிஷேகம்


தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முகப்புத் தோற்றம்

# மேலும் இரு மது விற்பனை நிலையங்கள் சீல் வைப்பு

நச்சுத் தன்மை கலந்த சாராயத்தை விற்றதாகச் சந்தேகிக்கப்படும் மேலும் இரு மதுபான விற்பனை நிலையங்கள் கடந்த வியாழனன்று மூடி 'சீல்' வைக்கப் பட்டன.

மட்டக்களப்பு புறநகர்ப் பகுதியில் உள்ள கூழாவடி, புதுநகர் ஆகிய இடங்களில் இவை இயங்கி வந்தன.

இவற்றின் உரிமையாளர்களான சாமித்தம்பி வடிவேல், தட்சணாமூர்த்தி மோகன் ஆகியோரும் விற்பனையாளரான வீரங்குட்டி நித்தியானந்த ராஜா என்பவரும் கைதாகி உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ஜே. விசுவநாதன் சந்தேக நபர்களை இம்மாதம் 12 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கஉத்தரவிட்டார்.

நச்சுத் தன்மை கலந்த சாராயத்தை குடித்த மொத்தம் 375 பேர் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரிகளில் இன்னும் சிகிச்சைபெற்றுவருகின்றனர்

மதுவரி திணைக்கள அதிகாரிகளால் ஏற்கனவே சீல் வைக்கப்பட்ட எருவில் மது விற்பனை நிலையத்தில் வைத்து கலப்படம் செய்த சாராயமே ஏனைய இடங்களுக்கும் எடுத்துச் செல்லப் பட்டு இவ்வளவு உயிரிழப்புக்களையும் பாதிப்புக்களையும் ஏற்படுத்தி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட சாராயத்துடன் இங்கு வைத்தே கலப்படம் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய 205 போத்தல் [illegible] எருவில் மதுவிற்பனை நிலையத்தில் இருந்து கைப்பற்றப் பட்டுள்ளது. (இ-21)


## 31ஆம் நினைவு நாள் அழைப்பு

தோற்றம்: 10 — 08 — 1913



மறைவு: 08 — 08 — 1997

### அமரர் சுவாமிநாதர் துரைசாமி

இன்று 07 – 09 – 97 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மயிலியதனை,
தொண்டமானாறு.

(49503)



உ

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு
ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார்
(காளி கோயில்)

## வருடாந்த மஹோற்சவம் - 1997

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 07 – 09 - 1997 ஞாயிறு முற்பகல் 11 மணி |
| சப்பறத் திருவிழா: | 14 – 09 – 97 ஞாயிறு மாலை 5.00மணி |
| இரதோற்சவம்: | 15 - 09 - 97 திங்கள் காலை 9 – 30 மணி |
| தீர்த்தோற்சவம் ; | 16 - 09 - 97 செவ்வாய் காலை 9.00 மணி |
| பூங்காவனம்: | 17 - 09 –97 புதன் மாலை 4.00 மணி |

விளம்பர அன்பளிப்பு:
நிரு கல்வி நிலையம்
ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (49498)



## I. A. B. (London)

Dec. 1997
Found
Inter and
Finals வகுப்புக்கள்
ஆரம்பம்:
10 - 09 - 1997

இலகு விரிவுரைகள்
வினாத்தாள்கள் அடங்கிய விளக்கங்கள்
உங்கள் பதிவுகட்கு

NORTH CEYLON
TECHNICAL INSTITUTE,
2nd Cross Street, Jaffna.

(49416)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

HONDA C D 185, மோட்டார் சைக்கிள், பெற்றோலில் ஒரு கைப் பாவனையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. புஸ்பநாதன், C.M.S 37, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
[49484]

மஸ்கன் ஐஸ்பெற்றாஸ் தண்ணீர் ராங் (400 L.) வில்லியஸ் பம் மாக் 12 என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:- 81/1 (257), கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.
[49478]

கன்னாதிட்டி வீதி, காளி கோயிலடி யாழ்ப்பாணம், எனும் முகவரியில் வீட்டுடன் காணி 1 பரப்பு 1.8 குளி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 78/9, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[49493]

பலஇன கலர் வளர்ப்பு மீன்கள் மற்றும் மீன் தொட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: குட்டி, 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லிக்கல்லூரியின் முன் ஒழுங்கை) நேரம் காலை 11 மணியிலிருந்து.
(49374)

### தவறிவிட்டது

25-08-97 சங்கானைக்கும் நவாலிக்கும் இடையில் எனது மூக்குக்கண்ணாடி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வே. சிவானந்தன், (அதிபர்) சங்கரத்தை சின்னம்மா வித்தியாசாலை, வட்டுக்கோட்டை எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
[49479]

### திருமண சேவை

சகல மதத்திலும், உத்தியோகத்திலுள்ள மணமகன், மணமகள் எம்மிடம் உள்ளனர். சாதகம், புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(49462)

### வீடு தேவை

நல்லூர் கோயில் சூழலில் பிரார்த்தனை மற்றும் தருமப்பணிகளை மேற்கொள்ளுவதன் பொருட்டு பொருத்தமான கட்டடம் வீடு விலைக்குத் தேவைப்படுகிறது. வெற்றுக் காணியும் கருத்திற் கொள்ளப்படும். விலை விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: மே/பா 'உதயன்' இல. 651.
[49477]

### நூலக வாரம்

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். மாணவ மணிகளே! மில்க்வைற் நீல சோப் சலவைத்தூள் 10 உறைகளுக்கு அறிவுநூல்கள், மில்க்வைற் செய்தி பெற்றுக் கொள்ளுங்கள்.
[சி/1503]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில்: 16 — 04 — 1922



விண்ணில்: 08 — 08 — 1997

## திருமதி ஞானம்மா காசிப்பிள்ளை

பாசத்துடன் எமை வளர்த்து ஆளாக்கிய
அன்புத் தெய்வமே! எந்நாளும்
உங்களை மறவோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகளைத் தெரிவித்தும், பல்வேறு வழிகளிலும் உதவிகள் புரிந்தும் எம் துயரில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (07.09.97) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(49475)

# நேற்று மாதிரி.... இதே தினம் ஓராண்டு!



## செல்வி ஞானந்தி கணநாதன்

(A/L விஞ்ஞானப்பிரிவு மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

உறவு: 09 — 08 — 1977
பிரிவு: 07 — 09 — 1996

**ஆண்டுத் திதி: 27 - 08 - 1997**

ஆத்மா அமைதி அடைய ஆண்டவனை
அர்ச்சிக்கின்றோம்.

- குடும்பத்தினர்

348, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
(49471)

# முக்கிய அறிவித்தல்

## பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை.

30-09-97 இல் அங்கத்தவர் இடாப்பை மூடுதல்

மேற்படி சங்கத்தின் கிளை ரீதியான அங்கத்தவர் இடாப்பு 30-09-97 இல் மூடப்பட்டு அதன் அடிப்படையில் உபவிதிக்கு அமைய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிளைக்குழுத் தேர்தல்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் கீழ்க் காட்டப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம்.

1. சங்க உபவிதிப்படி பங்கு ஒன்றின் பெறுமதி ரூபா 100 ஆகும். ரூபா 100 பங்குப் பெறுமதி உடையவர்களே வாக்காளர் பட்டியலில் இடம்பெறுவர்.
2. உறுப்பினர் ஒருவர் சங்கத்தின் அங்கத்துவத்தில் சேர்ந்து ஓராண்டுகளின் பின்னரே வாக்களிக்கவோ, நிர்வாகத்தில் இடம்பெறவோ முடியும்.

**வி.சேதுநாயகம்,** தலைவர்.
**க.வேலாயுதம்,** செயலாளர்.

(சி/1493)

## இறைபணிச் செம்மல் உயர்திரு.ச. விநாயகரத்தினம்

ஆசிரியர் அவர்களது

# மணிவிழா அறிவிப்பு

மேற்படி விழா தொடர்பாக மணிவிழாச் சபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவ்விழாவிற்கு பங்களிப்புச் செய்ய விரும்பும் ஆசிரியரின் மாணவர்கள், நண்பர்கள், அபிமானிகள் ஆகியோர் சபையின் பின்வரும் உத்தியோகத்தர்கள் எவருடனாவது தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்:
**சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை**
அதிபர், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

இணைச் செயலர்: **திரு. க. இரவீந்திரா**
துர்க்காபுரம், தெல்லிப்பழை
**செல்வி ந. நவதர்சினி**
278A, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

பொருளாளர்: **திரு. சு. ஏழூர்நாயகம்**
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

மலராசிரியர்கள்: **திரு. இ. குகநாதன்**
கலைப்பீடம், யாழ். பல்கலைக் கழகம்.
**செல்வி ஜீ. பகீரதி**
கலைப்பீடம், யாழ். பல்கலைக் கழகம்.

**உத்தேச விழா - ஐப்பசி 97**

இணைச் செயலர்,
மணிவிழாச் சபை.

(49417)

## மானிப்பாய் வடக்கு

# வளர்மதி சனசமூக நிலையம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்
## கிராம அபிவிருத்திச் சங்கம்
## அங்குரார்ப்பண வைபவம்
## திரு. புவனேந்திரன் நிருபன்

கிராம சேவையாளர் சேவைகள்

## பாராட்டு வைபவம்

காலம்: **1997 - 09 - 07**
ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1.00 மணி

தலைவர்: **திரு. சி. இரத்தினசிங்கம்**

இடம்: **ஷை சனசமூக நிலையம்**

முதன்மை விருந்தினர்:
**திரு. து. வைத்திலிங்கம்** அவர்கள்
(யாழ். மேலதிக அரசாங்க அதிபரும், வலி. தென் மேற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரும்)

சிறப்பு விருந்தினர்:
**திரு. ந. வேதநாயகன்** அவர்கள்
(வலி. தென் மேற்கு பிரதேசசபைச் செயலரும், மேலதிக அரசாங்க அதிபரும்)

**திரு. வே. கனகரட்ணம்**
(உதவித் திட்டமிடல் அதிகாரி, சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்)

**திரு. பெர. குகநாதன்**
(பெரும்பாக உத்தியோகத்தர், உடுவில் கமநல கேந்திர நிலையம்)

**திரு. க. ஸ்ரீபதி**
(கிராம அபிவிருத்தி அதிகாரி, சண்டிலிப்பாய் பிரதேச சபைச் செயலகம்)

மற்றும் பல கிராம சேவகர்கள் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.
(சி/1487)

உ

## அருள்மிகு தெல்லிநகர்த் துர்க்கை அம்பாளின்

# மஹா கும்பாபிஷேகத்திற்காக

அன்னை யுன்னைக் கேட்ட வரங் கிட்டவில்லை யென்றால்
அழுது மனம் நொந்திடுவோம் உன்னைஇல்லை யென்று
தன் மகவுக் கேதுதகும் என்றுணர்வாள் அன்னை
என்ப தனை நாமறியா திருப்பதுதான் உண்மை — (2)

**அன்னைதாசன் ஆனந்தராசா,** உரும்பிராய்.
(மீதிப்பாமலர் தாயின் சந்நிதியில் சார்த்தப்படும்)
(49486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அன்னை திரேஸா

மக்களுக்குச் சேவை செய்வதே சிறந்த இறை தொண்டு என்பதனைத் தாரக மந்திரமாக கொண்டு சமூகசேவையின் உலகச் சின்னமாக விளங்கிய அன்னை திரேஸா உயிர் நீத்து விட்டார்.

சாதாரண ஆசிரியையாகவும் கிறிஸ்தவ கன்னியாஸ்திரியாகவும் தமது வாழ்க்கையை ஆரம்பித்தவர் அவர். ஏழைகளிடத்தில் இறைவனைக் கண்டவர் அவர். அல்பேனிய நாட்டில் பிறந்தவர். இந்தியாவின் மாநகரங்களில் ஒன்றான கல்கத்தாவின் சேரிகளில் வாழ்ந்த ஏழைச் சிறுவர்களின் நிலையைக் கண்டு மனம் நொந்தார். அத்தகையோரின் வாழ்க்கை மேம்பாட்டுக்குத் தன்னை அர்ப்பணித்து, இறை பயத்தை நம்பிப் பணியாற்றத் தொடங்கினார்.

ஆரம்ப காலத்தில் தனியாகவே சேரியில் தனது அன்புப் பணியைத் தொடங்கியவர் சில காலத்தில் பெரிய தர்ம சபை ஒன்றையே நிறுவினார். அன்பு; தொண்டு, மனிதன் மனிதனாக மதிக்கப்படுதல் ஆகிய சீரிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டும் இயங்கும் அந்தத் தர்ம சபையில் இப்போது 3000க்கும் மேற்பட்ட கன்னியாஸ்திரிகளும், 400 சகோதரர்களும் 30,000 க்கும் மேற்பட்ட உடன் உழைப்பாளர்களும் பணிபுரிகின்றனர்.

தர்ம சபை தனது சமூக சேவையை வளர்த்து 123 நாடுகளில் இப்போது பணியாற்றி வருகிறது. அந்த நாடுகளில் 1369 மருத்துவமனைகளையும், 469 அறிவாலயங்களையும், 755 பணிமனைகளையும் கொண்டு இயங்குகிறது.

அன்னை திரேஸாவுக்கும் ஏனைய சமூக — சமய சேவையாளர்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருந்தது. ஏனையோர் ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் அன்னை திரேஸாவோ தாமே தம்மை அர்ப்பணித்துச் செயலிலும் தொண்டராக விளங்கினார். இதுவே அந்த வேறுபாடு, அவரது சிறப்பு.

அவரது பணியும் தொண்டும் தேச, இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து மனித குலத்துக்குச் செய்யப்படும் சேவைகளாகவே அமைந்தன. சொல்வதைவிட, போதனையைவிட செயலிலே அதிலும் தாம் செய்வதிலேயே அதிக நம்பிக்கை கொண்ட அன்னை திரேஸா அதனை விடவும் இறைத் துணையில் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

அவரது சிறப்பான மனித நேய' மனிதாபிமானப் பணிகளின் ஆதார சுருதியைஅவரது பின்வரும் எளிமை மிகுந்த வாசகங்கள் பிரதிபலிக்கின்றன.

என்னிடம் விசேடத் தன்மை எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. நான் செய்யும் பணிகளுக்குப் பிரதிபலன்களையும் எதிர்பார்க்கவில்லை. இவை அனைத்தும் கடவுள் செயல்.

நாம் செய்யும் காரியங்களில் முயற்சி தான் நம்முடையதே தவிர, வெற்றி எம்முடையது அல்ல.

சமூக, சமய சேவைகள் செய்ய விழைவோர் இவற்றை மனதிற் கொள்ள வேண்டும்.

அரசியல் கொள்கைகள் வெவ்வேறாயினும் மதக் கோட்பாடுகள் வேறுபடினும் உலகிலுள்ள அரசியல் மதத் தலைவர்கள் அனைவரையும் அன்னை திரேஸா தனது கருணை உள்ளத்தால் கவர்ந்திருந்தார்.

அன்னையின் தூய நோக்கம், சமூக, சமயப் பணிகள் தொடரப்பட வேண்டும். அதுவே அன்னையின் பணிக்கு உலகம் அளிக்கும் கைமாறாக அமையும்.

# பல்கலைக்கழக அனுமதி பெற்ற 9 மாணவர்களுக்கு அன்பளிப்பு

## பருத்தித்துறை நகரசபை வழங்கியது

நெல்லியடி, செப். 7

ஜீ. சி. ஈ. (உயர்தர) பரீட்சையில் மிகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்று மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், கலைப்பீடம் ஆகிய துறைகளில் பல்கலைக்கழக அனுமதி பெற்றுச் செல்லும் ஒன்பது மாணவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபாவை பருத்தித்துறை நகராட்சிமன்றம் அன்பளிப்புச் செய்துள்ளது.

பருத்தித்துறை நகரசபை புதிய செயலாளர் என். சோமசுந்தரம் இத்திட்டத்தை வைபவரீதியாக அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வி. ரி கிருஷ்ணசாமியும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, ஹாட்லிக் கல்லூரி அதிபர் வேணுகோபால், வட இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி கனகரத்தினம், ஆய்வு உத்தியோகத்தர் சிவானந்தா, பருத்தித்துறை பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் எஸ். மகேந்திரம் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர். (ஐ-109)

## கதிரிப்பாய் சம்பவம்:

## அடையாள அணிவகுப்பு வெள்ளியன்று நடைபெறும்

யாழ்ப்பாணம், செப். 7

அச்சுவேலி, கதிரிப்பாயில் சிறுமி ஒருத்தி பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அடையாள அணிவகுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பொலீஸாரின் பாதுகாப்பில் உள்ள துலகந்த் பிரியங்கார என்னும் சிப்பாய் நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய கொண்டு வரப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று முன்தினம் நடத்த முடியாது போனதால், அந்தச் சிப்பாய் தொடர்ந்து பொலீஸ் காவலில் வைக்கப் பட்டுள்ளார். (உ-3)

## டொனால்ட் கணேஷகுமார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட்:

# ஜொனியன்ஸ்அணியின்வெற்றியை தடுக்க இயலாத சென்றலைட்ஸ்!

## சண்முகலிங்கம் - அரசரட்ணம் சகோதரர் சிறப்பு ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 7

''டொனால்ட் கணேஷகுமார்'' வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் தோற்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

கடந்த வார இறுதியில் நடைபெற்ற ஆட்டங்களின் பெறுபேறுகள் வருமாறு:-

**சென்றலைட்ஸ் எதிர் ஜொனியன்ஸ்**

சென்றலைட்ஸ், ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 44. 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 241 ஓட்டங்களைப் பெற்றது. கௌரிபாலன் 56, சஞ்சீவ் 47, ஸ்ரீதரன் 32, பிரதீபன் 23 ஓட்டங்களைப் பெற்றனர். அரசரட்ணம் 32 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணி 16 ஓவர்களில் 56 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த போது அரசரட்ணம் துடுப்பாட உள்ளே நுழைந்தார். அவர் தமது சகோதரர் சண்முகலிங்கத்துடன் இணைந்து அபாரமாகத்துடுப்பாடியபோதும் 39 ஓவர்களில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 179 ஆக இருந்தபோது 60 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்தாடிய சண்முகலிங்கம்— லக்ஷ்மிகரன் ஜோடி 42 ஆவது ஓவர் வரை துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை 219-க்கு உயர்த்தியது.

ஐந்து ஓவர்களில் 25 ஓட்டங்களைப் பெற்ற லக்ஷ்மிகரன் ஆட்டமிழந்ததால் ஜொனியன்ஸ் அணி 22 ஓட்டங்களினால் ஆட்டத்தில் வென்றது. சண்முகலிங்கம் திறமையாக ஆடி ஆட்டமிழக்காமல் பெற்ற 76 ஓட்டங்கள் ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

ஸ்ரீதரன் 31 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

ஆட்ட நாயகனாக அரசரட்ணம் தெரிவானார்.

**கே. ஸி. ஸி. ஸி. அணி எதிர் யூனியன்ஸ் அணி**

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய வி. க. (கே. ஸி. ஸி. ஸி.) அணிக்கும் யூனியன்ஸ் வி. க. அணிக்கும் இடையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில் கே. ஸி. ஸி. ஸி. அணி 55 ஓட்டங்களினால் வென்றது. ஓட்ட விவரம் வருமாறு:-

★ கே.ஸி.ஸி.ஸி:- 43.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்கள். ஜெகதாஸ் ஆட்டமிழக்காமல் — 54 ஓட்டங்கள், சசிகரன் - 30, சபாநாதன் — 25 ஓட்டங்கள், ஜொனிடன் (27 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள்).

★ யூனியன்ஸ் அணி:- 38 ஓவர்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 120 ஓட்டங்கள். (பிரதீபன் 23 ஓட்டங்கள்.)

எட்டு ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன், துடுப்பாட்டத்தில் ஆட்டமிழக்காமல் 54 ஓட்டங்களையும் பெற்ற கே.ஸி. ஸி.ஸி. வீரர் ஜெகதாஸ் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் அணிகளின் புள்ளி நிலை வருமாறு:-

| அணி | குழு | ஆட்டங்கள் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| கே. ஸி.ஸி.ஸி | A | 2 | 2 | — | 7·99 |
| ஜொனியன்ஸ் | B | 2 | 1 | 1 | 6·75 |
| ஜொலிஸ்ரார்ஸ் | C | 1 | 1 | — | 5·01 |
| பல்கலைக்கழகம் | B | 1 | 1 | — | 3·77 |
| சென்றலைட்ஸ் | B | 1 | — | 1 | 3·19 |
| மானிப்பாய் பரிஷ் | A | 1 | — | 1 | 3·13 |
| யூனியன் | A | 1 | — | 1 | 2·20 |
| கிறாஸ்கொ[illegible] | C | 1 | — | 1 | 1·60 |
| பற்றிஷியன்ஸ் | C | — | — | — | — |

## விளையாட்டு அரங்கு

## பாலர் விளையாட்டு விழா

கொக்குவில் மனோன்மணி பாலர் பாடசாலை விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலைய முன்றலில் பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி சியாமளா நடராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திருமதி எஸ். கே. சண்முகநாதன் கலந்துகொள்வார். (ஐ-30)

## 3 டாக்டர்கள் வருகை

யாழ்ப்பாணம், செப். 7

வடபகுதி ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட டாக்டர்களில் மேலும் மூவர் கடந்த வியாழனன்று யாழ். வந்தடைந்தனர்.

இரு பெண் டாக்டர்களும், ஓர் ஆண் டாக்டருமே வந்துள்ளனர். இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் பணிபுரிவர். (ஐ-15)

## சமய சந்நிதிகளில்

வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயிலின் மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 15 ஆம்திகதி இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

துணவி அரசடிப்பிள்ளையார் கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

கரணவாய் மத்தி, நவிண்டில் குளவியடி ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மஹாகும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.45மணிமுதல் நடைபெறும். (ஐ-4)

பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. உற்சவம் 16ஆம்திகதி வரை நடைபெறும். (ஐ-117)

★ ★ ★

வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினா தீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறும்.

கும்பாபிஷேகத்தை ஒட்டிய கிரியாகால நிகழ்ச்சிகள் நேற்று ஆரம்பமாகின. (ஐ-111)

★ ★ ★

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும், (ஐ-30)

★ ★ ★

அச்சுவேலி தோப்பு மதுரை மீனாட்சி அம்மன் கோயில் அலங்காரத் திருவிழாவின் இறுதி நாளான இன்று பிற்பகல் ஒரு மணிக்கு ''அறிவியல் நோக்கில் ஆன்மீகம்'' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ சிவராசசர்மா உரையாற்றவுள்ளார். (ஐ-30)

★ ★ ★

வண்ணார்பண்ணை பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் நடைபெறும். (ஐ-4)

★ ★ ★

மாவை. கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலய ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் உடனுறை ஸ்ரீ மத் சிதம்பரேஸ்வர சுவாமி கோயில் பிராயச்சித்த அபிஷேகம் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகாகணபதிப் பிள்ளையார் ஆலய காளி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்ன விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (ஐ-100-90)

## நாளை

**ஆவணி 23**

திங்கட்கிழமை

**திதி:** ஷஷ்டி பிற்பகல் 2.29 வரை.

**நட்சத்திரம்:** விசாகம் பிற்பகல் 2.09 வரை.

ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 12.04-1.34

ராகுகாலம்: 7.34-9.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்

# மேலும் 200 குடும்பங்களுக்கு ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு

உரும்பிராய், செப். 7

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் 700 குடும்பங்கள் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவைப் பெறவுள்ளன.

பத்தமேனி கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 352 குடும்பங்களும், புத்தூர் கிழக்கு கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த 348 குடும்பங்களுமே இக் கொடுப்பனவைப் பெறவுள்ளன.

அண்மையில் இக் கொடுப்பனவு 1001 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. இது வரை கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மொத்தம் ஆயிரத்து 701 . குடும்பங்களுக்கு இந் நிவாரணம் கிடைத்துள்ளது. (ஐ-154)

## பூரண விசாரணை நடத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

டமிருந்து பெருமளவு மீனை அபகரித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

மீனுக்கான பெறுமதி அவர்களால் செலுத்தப்படவில்லை என்றும்-

இந்த ஆயுதக் குழுவின் அங்கத்தவர்கள் மீனவர்களைத் துன்புறுத்தி மீனை அபகரித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர் என்றும்- தெரிவித்துள்ளார். (இ-5)


**SCIENCE CENTRE**

யாழ். **College of Commerce**
கல்வி நிறுவனத்தில்
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**A/L 98 புதிய, பழைய பாடத்திட்டம்**
**DAY CLASS (பகல் நேரம்)**

அலகுரீதியாக துரிதமீட்டலும் வினாவிடையும்

CHEMISTRY - திரு. மகேஸ்வரன் B. Sc.
PHYSICS - திரு. சுகேந்திரன் B. Sc.
PURE/APP - திரு. ஐங்கரன் B. Sc.

ஆரம்பம்: **09-09-97** செவ்வாய் காலை 8.30 மணி

அனுமதிகளை 08-09-97-க்கு முன்பாகப் பெற்றுக் கொள்ளவும்.

குறிப்பு:- மேலதிக வகுப்புக்கள் மூலம் பாடத்திட்டம் முழுவதும் பூர்த்தி செய்யப்படும்.

(49483)



**PERSONAL CLASSES**

192, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

**O/L**

வினாவிடை வகுப்புக்கள்

கணிதம்: திரு. T. அற்புதராஜா
விஞ்ஞானம்: திரு. K. பாலமுருகன்

புதிய பிரிவு III

ஆரம்பம்: **08 - 09 - 97** திங்கள் பிற்பகல் 3 மணி
Mon., Tue. 3 - 5 P. M

(49466)


## மரண அறிவித்தல்

### நாகேசு கணேசபிள்ளை

காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர் நாகேசு கணேசபிள்ளை (பொலீஸ் கணேசு) கொழும்பில் காலமானார்.

இவர் அன்னமுத்துவின் அன்புக்கணவரும், கமலாதேவி, பவானி, பரராசசிங்கம் (அருஜிணா ஜுவலரி கொழும்பு), துரைராசசிங்கம், உருத்திரசிங்கம் (கொழும்பு), இரத்தினசிங்கம் (பிரான்ஸ்), கெங்காதேவி, ஜெயபாலசிங்கம்(ஐங்கரன் ஸ்ரோர், பசறை) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், பத்மநாதன் (நமுனகொல), அம்பலவாணர்(சிறிஅம்பாள், ஸ்ரோஸ் பசறை), தனலட்சுமி, லலிதராணி, கலாவதி, உருக்குமணி, அரியரத்தினம்(பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்), சீதாலட்சுமி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 4. 9: 97 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. துரைராசசிங்கம்
(மகன்)

தங்கோடை,
காரைநகர்.

(49495)

## வீதி திருத்தம்

பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைத் திட்டத்தின் கீழ், பருத்தித்துறை நகராட்சி மன்றம் மாதனை காளி கோயில் வீதியை மக்கிபோட்டு செப்பனிட்டுள்ளது.

## மோதல்

(முதலாம் பக்கத் தொடர்)

குறித்தே மோதல் தவிர்ப்பு மீறல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

வெற்றிலைக்கேணி கடற் பரப்பில் கடந்த வெள்ளி இரவு 11—00 மணியளவில் கடற் புலிகளின் படகுகள் மீது சிறிலங்கா கடற்படை தாக்குதலை மேற்கொண்டதாகவும்-

இதன் மூலம் சிறிலங்கா அரசு மோதல் தவிர்ப்பை மீறிவிட்டதாகவும்- விடுதலைப் புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கடற்படையினரின் தாக்குதலையடுத்து பதில் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதில் இஸ்ரேல் தயாரிப்பு 2 டோறாப் படகுகள் சேதமடைந்தன எனவும்புலிகளின் குரல் வானொலி தெரிவித்தது.

அதே சமயம் வெற்றிலைக் கேணிக்கடற் பரப்பிலும் பொலன்னறுவை மாவட்ட எல்லைப் பகுதியிலும் படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள் என்று படையினர் தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெற்றிலைக் கேணிக்கடற் பரப்பில் இடம்பெற்ற சண்டையில் புலிகளின் மூன்று படகுகள் மூழ்கடிக்கப்பட்டதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு டோரா படகுகள் சிறிய சேதத்துக்குள்ளாகியதாகவும் கடற்படை வீரர்கள் சிலர் காயம் அடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

பொலன்னறுவைச் சம்பவத்தில் 3 படையினர் கொல்லப்பட்டதாகவும், இருவர் காயம் அடைந்ததாகவும் படையினர் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணி அளவில் மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லையில் மாதுறு ஓயா, கந்தவத்தையில் இத்தாக்குதல் இடம் பெற்றதாகவும் —

சிங்கள விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதற்காக அமர்த்தப்பட்ட படையினரே தாக்குதலுக்கு உள்ளானதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஐ. நாவின்சிறுவர் அமைப்பான யுனிசெவ் நிறுவனம் மோதல் தவிர்ப்பைக் கைக் கொள்ளும்படிகோரி இருந்தது குறிப்பிடத்தக்கது. (இ 5-10-21-164)


எமது ஒரிஜினல் வெளியீடு
ராம்கி நடித்த
★ **உளவாளி**
அடுத்த வெளியீடு
கார்த்திக் நடித்த
★ **மிஸ்டர் மகாராணி**
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்,
(சி/1509)


# இலங்கைக்கு வெற்றி

காட்மாண்டு, செப். 7

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் ''சார்க்'' நாடுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று தற்போதைய சாம்பியனான இலங்கை அணி பாகிஸ்தான் அணியை 2 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டிகள் காட்மாண்டுவிலுள்ள 'டஷறாத்' விளையாட்டரங்கில் நடைபெறுகின்றன. (இ-10)

## லயன்ஸ் கழக படிப்பகம்

யாழ்ப்பாணம், செப். 7

சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகத்தினர் தமது செயலகத்தில் நாளை திங்கட்கிழமை படிப்பகம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இச் சேவைத் திட்டத்தில் மானிப்பாய் கோவிற்பற்று லியோ கழகத்தினரும் இணைந்து செயற்படவுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு மாதாந்தம் சுழற்சி முறையில் இலவசமாக பத்திரிகைகளை வழங்கவும் மானிப்பாய் கோவிற்பற்று லயன்ஸ் கழகம் திட்டமிட்டுள்ளது. (ஐ)

## 68 குடும்பங்கள் மீளக்குடியமர அனுமதி

மானிப்பாய், செப். 7

பெரியவிளான் கிராம சேவகர் பிரிவில் மீளக்குடியமர விண்ணப்பித்தவர்களில் முதல் 68 குடும்பங்களுக்கு அங்கு மீளக்குடியமரும் அனுமதி கிடைத்திருப்பதாக கிராம அலுவலர் சி. பொ. யோகராசா தெரிவித்துள்ளார்.

இவர்கள் தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்று குடியமரலாம் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

## எழுத்தறிவு தினம்

சர்வதேச எழுத்தறிவுத் தினம் நாளை எட்டாம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இத்தினத்தில் கல்வி பெறாத எழுத்தறிவற்றவர்களுக்கு எழுத்தறிவும், வேலைத்திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக பருத்தித்துறை கல்விக் கோட்டப் பணிப்பாளர் வி. ரி. செல்வரத்தினம் தெரிவித்தார். (ஐ-109)

## டயானாவின் இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊர்தியை நோக்கித் தலை வணங்கினார்கள்.

வாகனம் பக்கிங் ஹாம் அரண்மனையைக் கடந்ததும் எலிஸபெத் மகாராணியார் தனது வாகனத்தில் இறுதி இறைவழிபாடுகள் நடைபெறும் வெஸ்ற் மினிஸ்டர் அபே தேவாலயத்துக்குப் புறப்பட்டார்.

அவர் புறப்பட்டதும்அரண்மனையின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

பூதவுடல் ஊர்தி ஜேம்ஸ் அரண்மனை முன் வந்த போது டயானாவின் முன்னாள் கணவர் இளவரசர் சார்ள்ஸும், டயானாவின் இரண்டு மகன்களான வில்லியமும் ஹரியும் அவர்களோடு எலிஸபெத் மகாராணியாரின் கணவர் பிலிப்பும் ஊர்திக்குப் பின் ஊர்வலத்தில் நடந்தார்கள்.

4-00 மணிஅளவில் வெஸ்ற் மினிஸ்டர் அபே தேவாலயத்துக்குள் டயானாவின் பூதவுடல் வைக்கப்பட்டது.

எல்லாமே துல்லியமாகத் திட்டமிடப்பட்டிருந்தன, குதிரைகளின் காலடிகளின் எண்ணிக்கை கூட நிமிடத்துக்கு 70 எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

ஆலயத்தில் முதல் வருகை ஜெபமும் பாடலும் முடிந்த பின்பு டயானாவின் இரு சகோதரிகள் இரங்கற் பா படித்தனர். ''டயானா! எனக்காக மீண்டும் ஒருமுறை நீ சிரிக்க மாட்டாயா?'' என மூத்தசகோதரி சாரா படித்த போது அனைவரது கண்களும் பனித்தன.

தொடர்ந்து பிரதமர் ரொனி பிளயர் பைபிள் வாசித்தார்.

பைபிள் வாசகத்தைத் தொடர்ந்து அனைவரையும் நெக்குருகிக் கண்ணீர் சிந்தச் செய்த 'கன்வே இன் த வின்ட்' என்ற காவியப் பாடலைப் பிரபல பாடகர் ஹெலீற்றன் ஜோன் பாடினார்.

இந்தப் பாடலுக்கு பின்னர் டயானாவின் மூத்த சகோதரர் பேர்ள்ஸ் ஸ்பென்ஸர் உரையாற்றினார்.

தொடர்ந்து கன்டர் பெரி ஆங்கிலிக்கன் பேராயர் மேதகு பாரி இறுதி உரை வழங்கினார்.

5.00 மணிக்கு ஆலய இறை வழிபாடு நடைபெற்று முடிந்தது. தொடர்ந்து நாடு முழுவதும் ஒரு நிமிட மௌன அஞ்சலி கடைப்பிடிக்கப்பட்டது.

பின்னர் டயானாவின் பூதவுடல் அல்கார் தீவு குடும்ப கல்லறைத் தோட்டத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

குடும்பத்தார் நெருங்கிய நண்பர்கள் மட்டுமே பங்கெடுத்துக் கொள்ள பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. (இ-5)

## பொலீஸா...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆர்ப்பாட்டக் கும்பல்களைக் கலைத்தல் போன்றவை இந்த தீவிர பயிற்சியில் அடங்கும்.

தங்கள் சொந்த பாதுகாப்புத் தொடர்பாக அரச நாடாளுமன்றஉறுப்பினர்கள் சபாநாயகரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே பொலீஸாருக்கு தீவிர பயிற்சியளிக்கும் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக 'த ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அரசாங்க மற்றும் பொது கட்டடங்களிலும், சில ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் வைத்தே பொலீஸாருக்கு இப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-150)


**யாழ். நகரில்.....**

தரமான ஐஸ்கிறீம் வகைகள், ஐஸ் ஜெலி, சொக்லட் கிறீம்,
குளிர்பான, சிற்றுண்டி வகைகளுக்கு என்றென்றும்
பெயர் பெற்ற ஒரே நிறுவனம்:

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

**119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (சி-1505)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணி மனையில் 07-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.